மீனா, சிங்கே ஊர்வலத்தில் பங்குபெற விரும்பினாள். அதற்காக அவள் ஒரு சிறிய மிதவையைச் செய்தாள்.

ஆனால், அந்த மாபெரும் ஊர்வலத்தில் இந்தச் சிறிய மிதவையைப் பார்வையாளர்கள் விரும்புவார்களா?

இது தன்னம்பிக்கை, விடாமுயற்சி, குழுவாக இணைந்து முயலுதல் ஆகியவற்றைப் பற்றிய சுவாரசியமான ஒரு கதை.

உங்களுக்கு வழங்குவோர்:
chingay PARADE SINGAPORE | People's Association

ISBN 978-981-94-6099-1

# என் சின்னஞ்சிறு சிங்கே மிதவை

ஜோசஃப் லீ



உங்களுக்கு வழங்குவோர்:

chingay PARADE SINGAPORE | People's Association

ஆதரவு அளிப்பவர்கள்:

Narpani நற்பணி NARPANI PEARAVAI | National Heritage Board | POSB | POSB PAssion Kids Fund

# என் சின்னஞ்சிறு சிங்கே மிதவை

ஜோசஃப் லீ



ஆண்டுதோறும் நடைபெறும் சிங்கே ஊர்வலம் அன்றிரவு நடைப்பெற்றது.
மீனாவின் குடும்பத்தார் அதைத் தொலைக்காட்சியில் பார்த்தார்கள்.
மீனாவுக்கு எதுவும் புரியவில்லை. ஆனாலும் அவள் அதை ஆர்வத்துடன் பார்த்தாள்.





மினுமினுக்கும் விளக்குகள்! வண்ண வண்ண
மிதவைகள்! இனிய இசை!

இவை யாவும் மீனாவை
மெய்ம்மறக்கச் செய்தன.

அவள் ஒவ்வொரு நடனமணியின் அசைவுகளையும்
கண்கொட்டாமல் பார்த்தாள்.



அன்றிரவு மீனா, “நானும் ஒருநாள் சிங்கே மிதவையில் ஏறிச் செல்வேன்,” என்று தன் பொம்மையிடம் சொன்னாள்.

அந்தப் பெரும் கனவோடு மீனா மெல்ல உறங்கினாள்.

மாதங்கள் பல ஆயின. மீனா சிங்கே ஊர்வலத்தைப்பற்றி மறந்தே போனாள்.

ஒருநாள், அவள் தன் அண்டைவீட்டுக்காரர் திரு மிங்கைப் பார்த்தாள். அவர் மற்ற அண்டைவீட்டுக்காரர்களுடன் சேர்ந்து மூங்கில் கழிகளையும் மினுமினுப்புத் தாள்களையும் கொண்டு ஏதோ ஒன்றை உருவாக்கிக்கொண்டு இருந்தார்.

“நீங்கள் என்ன செய்கிறீர்கள்?” என்று மீனா கேட்டாள்.




“நாங்கள் சிங்கே ஊர்வலத்திற்காக ஒரு மிதவையை உருவாக்குகிறோம்,” என்றார் திரு மிங்.

“சிங்கே பல்வேறு பண்பாடுகளைக் கொண்டாடுகிறது; மக்களை ஒன்றிணைக்கிறது,” என்றார் திரு மிங். “சிங்கே ஊர்வலம் முன்பு சீனப் புத்தாண்டுக் காலத்தில் நடைபெறும் தெரு ஊர்வலமாக இருந்தது. இப்போது, அது சிங்கப்பூரில் உள்ள எல்லா இனத்தவருக்கும் பண்பாட்டினருக்கும் உரிய மகிழ்ச்சியான திருவிழாவாக மாறியுள்ளது.”

“பல்லின நடனமணிகள், ‘கொம்பாங்’ கலைஞர்கள், மரக்கால் ஆட்டக்காரர்கள் எனப் பலரும் ஊர்வலத்தில் பங்கெடுப்பார்கள்.”



உடனே மீனா, “நானும் இந்த ஊர்வலத்தில்
கலந்துகொள்ளப் போகிறேன்,” என்றாள்.



மீனா வீடு திரும்பியதும் தன் அறையிலிருந்த பழைய பெட்டிகள், பொத்தான்கள், ரிப்பன்கள், கயிறுகள் முதலியவற்றைத் தேடி எடுத்தாள். அவள் தன் பாட்டியின் தோட்டத்திலிருந்து சாமந்திப் பூக்களைப் பறித்து வந்தாள்.

தினமும் அவள் அந்தப் பொருள்களுக்கு வண்ணம் தீட்டி அவற்றை ஒன்று சேர்த்தாள். அவளுடைய சின்னஞ்சிறு மிதவை மெல்ல மெல்ல வடிவம் பெறத் தொடங்கியது.





"நீ நட்சத்திரத்தைப்போல மின்னுகிறாயே!
உன்னை மின்மினி என்று அழைக்கப் போகிறேன்,"
என்று மீனா மலர்ந்த முகத்துடன் கூறினாள்.



மீனா மின்மினியைத் திரு மிங்கிடம் காட்டினாள். திரு மிங் அதைப் பார்த்து,
“குழந்தையைப் போலச் சிறியதாகவும் அழகாகவும் உள்ளதே,” என்றார்.

அவர் தாம் செய்த மிதவையைத் திரும்பிப் பார்த்தார். மீண்டும் மீனாவிடம்,
“பெரிய ஊர்வலத்திற்கு உன் சிறிய மிதவை பொருத்தமானதா என்று தெரியவில்லை.
ஆனால், எல்லா பெரிய மிதவைகளும் தொடக்கத்தில் சிறியதாகத்தான் இருந்தன,” என்றார்.

அதைக் கேட்டதும்
மீனாவின் முகம் வாடியது.



மீனா கனத்த மனத்துடன் மின்மினியை இழுத்துக்கொண்டு
வீட்டை நோக்கி மெல்ல நடந்தாள்.




"ஆம், நாம் சிறிதாகத்தான் இருக்கிறோம்!" என்று மீனா வருத்தத்துடன் சொன்னாள்.



அன்றிரவு, மீனாவின் அம்மா
அவளைக் கட்டி அணைத்தார்.



"உதவி கிடைத்தால் சிறிய யோசனைகளும் பெரிதாய் மாறலாம்!"

என்றார்.

மறுநாள், மீனா தன் நண்பர்களை விளையாட்டு மைதானத்தில் சந்தித்தாள்.
“நூருல், ஷென், ஏடன், என் மின்மினியை மேலும் சிறப்பாக்க எனக்கு உதவுவீர்களா?”
என்று மீனா கேட்டாள்.




“கண்டிப்பாக!”
என்று நண்பர்கள் ஒன்றாய்க் குரல் எழுப்பினர்.

நண்பர்கள் அவரவர் வீட்டிலிருந்து சில பொருள்களை எடுத்து வந்தார்கள்.

நூருல், 'பத்திக்' துணியையும்
'கொம்பாங்' ஒன்றையும்
கொண்டுவந்தாள்.








ஷென், கூண்டு விளக்கு செய்வதற்கான
பொருள்களையும் வண்ண மலர்களையும்
கொண்டு வந்தான்.

ஏடன்,
நட்சத்திரம்போல்
மின்னும் விளக்குகளை
எடுத்து வந்தான்.





மீனாவின் அம்மா, பளபளக்கும்
மிருதுவான வண்ண மயில்
இறகுகளைக் கொடுத்தார்.



பிள்ளைகள் மின்மினியை அலங்கரித்தார்கள்.
அது மிடுக்காகவும் அழகாகவும் காட்சியளித்தது.
பிள்ளைகள் கைதட்டி மகிழ்ந்தார்கள்.
அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு பாடலைப் பாடினார்கள்.

சின்னஞ்சிறிதாய் இருந்தாலும், நீயும் ஒரு நட்சத்திரமே!
வண்ணம் பலவும் கொண்டே நீ, எங்கும் ஒளியைக் கூட்டுகிறாய்!
சேர்ந்து நாமும் உருவாக்கிடுவோம்! ஒன்றுகூடி விளையாடிடுவோம்!
சிங்கே ஊர்வலத்தில் நம் மகிழ்ச்சியைப் பகிர்ந்திடுவோம்!




பிள்ளைகள் ஆவலுடன் எதிர்பார்த்த நாளும் வந்தது. சிங்கே ஊர்வலம் தொடங்கியது. பெரிய பெரிய மிதவைகள் ஊர்ந்து சென்றன. அவை பல குடியிருப்புப் பேட்டைகளுக்கும் சென்றன.



அடுத்து வந்தது, மின்மினி! மீனாவும் அவள் நண்பர்களும் அதனுடன் வந்தார்கள்.
சின்னஞ்சிறியதாய் இருந்தாலும் பார்ப்பவர் மனத்தைக் கவரும்வண்ணம்
மின்மினி பல வண்ணங்களில் மினுமினுத்தது.

"அதோ பாருங்கள்! அந்தச் சிறிய மிதவை பார்க்க எவ்வளவு அழகாக இருக்கிறது!"
எனப் பார்வையாளர் ஒருவர் சத்தமாகச் சொன்னார்.



அனைவரும் மின்மினியைப் பார்த்துக் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். மீனாவுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

“சிறியதாக இருந்தாலும் அன்பின் வெளிப்பாட்டில் மின்மினியே **ஆகப் பெரியது,**” என்று திரு மிங் பாராட்டினார்.

மீனா மின்மினியைப் பார்த்து, “நீ அளவில் சிறியதே! ஆனால், மிகப் பெரிதாய் ஒளி வீசுகிறாய்!” என்று சொல்லி மகிழ்ந்தாள். மின்மினி அனைவரையும் ஒன்றிணைத்து ஆனந்தக் கூத்தாடச் செய்தது.

அன்றிரவு, மீனா மின்மினியைக் கட்டி அணைத்தாள்.
“நாம் சாதித்துவிட்டோம்,” என்றாள்.




பெரியதோ, சிறியதோ
இளையரோ, முதியவரோ-
சிங்கே கொண்டாட்டம்
எல்லாருக்குமானது.

நாம் ஒன்றிணைந்து
நம் பண்பாடுகளைப் போற்றும்போது,
நட்சத்திரங்களாய் மின்னுவோம்!

மின்மினியைப் போலவும்!
உங்களைப் போலவும்!

# மீனாவுடன் கற்போம்

## சிங்கே பற்றிய தகவல்கள்




### 1 சிங்கே, மக்களின் ஊர்வலம்



நுண்ணிய வேலைப்பாடுகளைக்கொண்ட ஆடைகள், வண்ண மிதவைகள், பண்பாட்டுக் கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சிங்கே, பல்லினப் பண்பாட்டைக் கொண்டாடும் மக்களின் ஊர்வலம் ஆகும்.

### 2 சிங்கே என்றால் “ஆடையும் முகமூடியும் அணிந்து ஆடும் கூத்து”



ஹாக்கியன் மொழியில் ‘சிங்கே’ என்றால் ஆடையும் முகமூடியும் அணிந்து ஆடும் கூத்து என்று பொருள். அப்போது மக்கள் சிறப்பான ஆடைகளை அணிந்து கலைநிகழ்ச்சிகள் படைப்பர்.

### 3 இது எல்லாருக்குமானது!



எல்லா வயதினரும் இனத்தவரும் பண்பாட்டுக்குரியவரும் இதில் கலந்துகொள்வர். சீனர், மலாய்க்காரர், இந்தியர், யூரேசியர், இன்னும் பலரும்... பிள்ளைகளும் உட்பட!

### 4 சிங்கே 1973-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது




சிங்கே எளிய தெரு ஊர்வலமாகத் தொடங்கி, இப்போது சிங்கப்பூரின் மிகப்பெரிய கொண்டாட்டங்களில் ஒன்றாக உள்ளது. சீனப் புத்தாண்டுக் காலத்தில் ஆடலும் பாடலும் நிறைந்த வண்ணமயமான நிகழ்ச்சியாக இது உருவெடுத்துள்ளது!

### 5 நகரும் மிதவைகள்!



சிங்கே மிதவைகளுக்குச் சக்கரங்களும் விளக்குகளும் மட்டுமன்றி அசையும் பாகங்களுங்கூட உள்ளன. சில மிதவைகள் சுழலவும் இருளில் ஒளிரவும் செய்யும்.

### 6 யுனெஸ்கோவின் பட்டியலில் சேர்க்கச் சிங்கப்பூர், மலேசியா ஆகிய இருநாடுகளால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது




சிங்கே நமது வாழும் மரபு. ஒவ்வோர் ஆண்டும் நாம் கொண்டாடும் பாரம்பரியம். யுனெஸ்கோ பட்டியலில் இடம்பெறுவதால் இதன் சிறப்பை நாம் உலகிற்கு உணர்த்த முடியும்.




சிங்கே பற்றி மேலும் அறிந்துகொள்ள வருடுங்கள்.

# அது யாருடைய ஆடை?

இவற்றில் எந்த ஆடையை
எந்தக் கலைஞர் அணிவார் என்று
உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?



உங்கள் நண்பர்களுடன்
சேர்ந்து கண்டுபிடியுங்கள்!



இந்தியப் பாரம்பரிய நடனம்



மலாய்க் கொம்பாங் இசை



யூரேசிய நாட்டுப்புற நடனம்



சீனச் சிங்க நடனம்












மின்மினிக்கு மேலும் எவற்றைச்
சேர்க்க விரும்புகிறீர்கள்?



# உங்கள் மின்மினியை உருவாக்குங்கள்






## சிங்கேயில் அடியெடுத்து வையுங்கள்: மரபுகள் உயிர்பெற்றெழுவதைப் பாருங்கள்

மக்கள் சங்கம் (PA) ஏற்பாடு செய்யும் சிங்கே, சிங்கப்பூரின் மிகப் பிரம்மாண்டமான ஊர்வலம் ஆகும்.

இந்தத் துடிப்பான நிகழ்வு, வண்ணமயமான பண்பாட்டு நிகழ்ச்சிகளின் வாயிலாகப் பல தலைமுறைகளைக் கவர்ந்துள்ளது. மேலும், நம் சமூகங்களை ஒன்றிணைத்து நமது மரபையும் பன்முகத்தன்மையைக் கொண்டாடச் செய்கிறது. ஒவ்வோர் ஆண்டும் மக்கள் சங்கம் இந்த அணிவகுப்புக்குப் புதுமை சேர்க்கவேண்டிப் பாரம்பரியக் கூறுகளைச் சமகால வெளிப்பாடுகளுடன் பிணைக்கிறது.

SG60-ஐ கொண்டாடுவதற்குச் சிங்கே 2025 மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பார்வையாளர்கள் ஆழ்நிலை அனுபவத்தைப் பெறும்வண்ணம் அது அமைந்திருந்தது. நான்கு நிலைகளைக் கொண்ட மேடை, கலைஞர்களுக்காகப் போடப்பட்டிருந்தது. சமூகப் பங்கேற்பை மேம்படுத்துவதற்காகக் குடியிருப்பாளர்களும் மாணவர்களும் இணைந்து உருவாக்கிய கலைப் படைப்புகளைக் காட்சிப்படுத்த அணிவகுப்புப் பாதையில் 'PAssionArts Street' அமைக்கப்பட்டிருந்தது. இவை யாவும் பார்வையாளர்களுக்கு முற்றிலும் ஒரு புதிய அனுபவத்தை ஏற்படுத்தின.

சிங்கப்பூரும் மலேசியாவும் 2025-இல் தங்களுக்கிடையிலான இருதரப்பு அறுபதாம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், சிங்கே அணிவகுப்பை யுனெஸ்கோவின் மனிதகுலத்தின் நுண்ணிய பண்பாட்டுப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்க இணைந்து பரிந்துரை செய்துள்ளன.

பண்பாடுகள் ஒன்றிணையும் இந்த மிகச் சிறந்த கொண்டாட்டத்தை எங்களுடன் இணைந்து கொண்டாட உங்களை வரவேற்கிறோம்.

*Information is accurate as of May 2026.*

© 2026, People's Association
9 King George's Avenue, Singapore 208581, Republic of Singapore

Published in 2026. All rights reserved.

No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without the prior written permission of the copyright holder.

Cataloging-in-Publication Data

Lee, Josef, 1979 –
My Little Chingay Float / written and illustrated by Josef Lee
Singapore: People's Association

ISBN: 978-981-94-6099-1

Special Thanks to:
Mdm Usha Rani Subramaniam
Lead Specialist, Tamil Language
Mother Tongue Languages Branch
Ministry of Education, Singapore

நன்றி:
திருவாட்டி உஷாராணி சுப்பிரமணியம்
வழிகாட்டு சிறப்பாய்வாளர், தமிழ்மொழி
தாய்மொழிகள் துறை
கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

உங்களுக்கு வழங்குவோர்:

Chingay Parade Singapore | People's Association

ஆதரவு அளிப்பவர்கள்:

Narpani நற்பணி | National Heritage Board | POSB | POSB PAssion Kids Fund